**PRIMARY SCHOOL**

**PRELIMINARY EXAMINATION - 2015**

**TAMIL LANGUAGE - PAPER 2**

**PRIMARY 6**

பெயர் : ______________________________ [ ]

வகுப்பு : Primary 6 ______ தேதி : ______


நேரம் : 1h 40 min ______ பெற்றோர் கையொப்பம் : ______

| | தலைப்பு | பெறவேண்டிய மதிப்பெண் | பெற்ற மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | வேற்றுமை | 12 | |
| 2 | செய்யுள்/பழமொழி | 12 | |
| 3 | தெரிவுவிடைக் கருத்தறிதல் | 10 | |
| 4 | சொற்பொருள் | 6 | |
| 5 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் | 6 | |
| | மொத்தம் | 46 | |

# P6 PRELIMINARY
# TESTPAPER 9

வினா 2.

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுது. படத்தின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் உதவிச் சொற்களை நீ இந்தக் கட்டுரை எழுதுவதற்குப் பயன்படுத்திக் கொள்ளவும்.



| | | |
|---|---|---|
| மணியோசை | அமைதியாக | வேகமாக |
| திகைத்தனர் | வகுப்பைவிட்டு | சரியான நேரத்தில் |
| ஆசிரியர் | வெளியேறுதல் | தலைமையாசிரியர் |
| வரிசைப்படுத்துதல் | படிகளில் | முன்னோட்டப்பயிற்சி |

Q1 முதல் Q25 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில் சரியான விடையின் எண்ணுள்ள (1, 2, 3 அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு.

**A1 வேற்றுமை**

**Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)**

ஒரு காட்டில் மான்கள் ஒன்றாகச் சேர்ந்து வாழ்ந்தன. அவற்றிற்கு ஒரு தலைவன் உண்டு. அது தன் Q1________________ ஆபத்தின்றி பாதுகாத்து வந்தது. ஒரு நாள் வேடன் ஒருவன் மற்ற வேடர்களைப் போல் புதர்களில் மறைந்திருந்து வேட்டையாடாமல் ஒரு Q2________________ உச்சியில் ஏறி அமர்ந்தான். பின் அவன் மான்களின் Q3________________ தென்படாதபடி மறைந்துகொண்டான். மான் கூட்டத்தை மரத்தடிக்கு ஈர்க்க அவன் கனிகளைப் பறித்து Q4________________ எறிந்தான். மான்கள் பழங்களை நோக்கி ஓடின. உடனே மான்களின் Q5________________ சந்தேகம் வந்தது. அது, "அந்தப் பழங்களை யாரும் உண்ணாதீர்கள்," என்றது. மரத்தைக் கூர்ந்து கவனித்த மான், வேடனைக் கண்டதும் மற்ற மான்களுடன் காட்டிற்குள் ஓடியது. வேடன் Q6________________ மரத்தைவிட்டுக் கீழே இறங்கினான். மான்களைப் பிடிக்கப் போட்டத் திட்டம் நிறைவேறவில்லையே என்று வேடன் வருந்தினான்.

Q1
(1) கூட்டத்தோடு
(2) கூட்டத்தை
(3) கூட்டத்தின்
(4) கூட்டத்துக்கு

( )

Q2
(1) மரத்துக்கு
(2) மரத்தின்
(3) மரத்திலிருந்து
(4) மரத்தினால்

( )

Q3 (1) கண்களில்

(2) கண்களது

(3) கண்களுடன் ( )

(4) கண்களை

Q4 (1) மான்களை

(2) மான்களது

(3) மான்களால் ( )

(4) மான்களிடம்

Q5 (1) தலைவனுக்கு

(2) தலைவன் ( )

(3) தலைவனுடன்

(4) தலைவனில்

Q6 (1) ஏமாற்றத்தால்

(2) ஏமாற்றத்தை

(3) ஏமாற்றத்துடன் ( )

(4) ஏமாற்றம்

**A2 செய்யுள் / பழமொழி**

**Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)**

Q7 __________ துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது.

(1) வானத்தின்
(2) மேகத்தின்
(3) விசும்பின்
(4) விண்ணின்

Q8 ஒரு கை தட்டினால் ஓசை __________?

(1) வருமா
(2) எழும்புமா
(3) கேட்குமா
(4) தருமா

Q9 எப்பொருள் __________ தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(1) எக்குணம்
(2) எப்பண்பு
(3) எத்தன்மை
(4) எத்தரம்

Q10 __________ துணியாதே.

(1) அறியாமல்
(2) பகுத்தறியாமல்
(3) தெரியாமல்
(4) புரியாமல்

Q11 கரைப்பார் கரைத்தால் கல்லும் __________

(1) நகரும்.
(2) மறையும்
(3) தேயும்
(4) கரையும்

Q12 குணம்நாடி __________ நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

(1) கெடுதியும்
(2) தீமையும்
(3) குறையும்
(4) குற்றமும்

**B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்**

**பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.**

விக்கிரமன் என்னும் மன்னர் தமிழ் நாட்டை ஆண்டு வந்தார். அவர் பேசும் கிளி ஒன்றை ஆசையோடு வளர்த்து வந்தார். அது அறிவுக்கூர்மை மிக்க ஒரு கிளி. மன்னர் கிளியின்மீது அதிக நம்பிக்கை வைத்திருந்தார். அவர் எச்செயலையும் கிளியுடன் ஆலோசித்த பிறகே ஒரு முடிவை எடுப்பார். அதனால் அமைச்சர்கள் கிளியின்மீது பொறாமை கொண்டனர்.

ஒரு சமயம் மன்னர் நோய்வாய்ப்பட்டார். வைத்தியர்களால் மன்னரைக் குணப்படுத்த இயலவில்லை. கிளி மன்னரின் நிலையைக் கண்டு வருந்தியது. அது என்ன செய்யலாம் என்று யோசித்தது. அது உடனே தன் நண்பர்கள் வாழும் காட்டுக்குப் பறந்தது. கிளி தான் வந்த காரணத்தைத் தன் நண்பர்களிடம் விளக்கியது. அவை கிளியிடம் ஒரு பழத்தைத் தந்து "இப்பழத்தை உன் மன்னனிடம் கொடு. அவர் விரைவில் குணமடைவார்," என்று ஆறுதல் கூறின.

கிளி அந்தப் பழத்தைப் பெற்றுக்கொண்டது. மன்னர் விரைவில் குணமடைந்துவிடுவார் என்ற ஆனந்தத்துடன் அரண்மனையை நோக்கிப் பறந்தது. இரவு நேரம் ஆகிவிட்டதால் கிளி ஒரு மரப்பொந்தில் தங்கியது. அது பழத்தை மரப்பொந்தில் வைத்துவிட்டு நித்திரைகொண்டது. அந்த மரப்பொந்தில் ஒரு நச்சுப் பாம்பு வசித்தது. பொந்தில் ஏதோ இருக்கிறது என்று உணர்ந்த பாம்பு, பழத்தைக் கடித்தது. பாம்பின் நஞ்சு பழத்தில் இறங்கியது. இதை அறியாத கிளி, பழத்தை எடுத்துக்கொண்டு அரண்மனைக்குப் பறந்தது.

கிளி பழத்தை மன்னரிடம் கொடுத்து அதை உண்ணுமாறு சொன்னது. உடனே அமைச்சர்களில் ஒருவர் அதைத் தடுத்து நிறுத்தினார். அவர், "மன்னரே! பழத்தைச் சோதித்துப் பார்த்துவிட்டு உண்பதே சிறப்பு!" என்றார். "என் கிளியின்மீது எனக்கு நம்பிக்கை உண்டு. அதனால் பழத்தைச் சோதிக்க வேண்டிய அவசியமில்லை," என்றார் மன்னர். "மக்களைக் காப்பது மன்னரின் கடமை. அதைப் போல மன்னரைக் காப்பது அமைச்சரின் கடமையாகும். அதனால் பழத்தைச் சோதித்தே ஆகவேண்டும்," என்று அமைச்சர் திண்ணமாகக் கூறினார். அமைச்சரின் சந்தேகத்தைத் தீர்த்து வைக்க மன்னர் ஒப்புக்கொண்டார்.

அரண்மனையில் இருந்த ஒரு கோழி அந்தப் பழத்தைத் தின்றது. அது அத்தருணமே இறந்துவிட்டது. சீற்றங்கொண்ட மன்னர், சிந்திக்காமல் கிளியைக் கொன்றார். அமைச்சர்கள் கிளி இறந்ததை எண்ணி மகிழ்ந்தனர். [illegible]

Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட் அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு (10 மதிப்பெண்கள்)

Q13 மன்னர் கிளியின்மீது நம்பிக்கை கொள்ள காரணம் என்ன?
(1) கிளி பேசும் திறமை பெற்றிருந்ததால்
(2) கிளி அறிவாற்றலோடு நடந்துகொண்டதால் ( )
(3) கிளி மன்னர்மீது அன்பு வைத்திருந்ததால்
(4) கிளி மன்னரின் பேச்சை மதித்ததால்

Q14 அமைச்சர் ஏன் மன்னரைப் பழத்தைச் சாப்பிடவிடாமல் தடுத்தார்?
(1) கிளியின்மீது சந்தேகம் வந்ததால்
(2) மன்னரைக் காப்பாற்றும் கடமை இருந்ததால்
(3) பழத்தில் விஷம் இருப்பதை அறிந்ததால் ( )
(4) மன்னரின் உயிரைக் காப்பாற்ற எண்ணியதால்

Q15 ஒரு மன்னரின் கடமை எது என்று அமைச்சரால் கூறப்பட்டது?
(1) மக்களின் நம்பிக்கையைப் பெறுவது
(2) அமைச்சர்களை மதித்து நடத்துவது
(3) மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது ( )
(4) அமைச்சர்களுடன் ஆலோசித்து முடிவு எடுப்பது

Q16 மன்னர் எப்போது கிளியின்மீது கோபங்கொண்டார்?
(1) பழத்தைத் தின்ற கோழி இறந்தபோது
(2) கிளி விஷம் இறங்கிய பழத்தைத் தந்தபோது ( )
(3) கிளியின் சூழ்ச்சியை அறிந்தபோது
(4) அமைச்சர் பழத்தைச் சோதித்தபோது

Q17 மன்னரின் முடிவினால் அவருக்கு என்ன இழப்பு ஏற்பட்டது?
(1) மன்னருக்கு உண்மை தெரியாமல் போனது
(2) கோழி இறந்தது
(3) கிளி கொல்லப்பட்டது ( )
(4) அமைச்சரின் கடமை தவறியது

## B4 சொற்பொருள்

**Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)**

Q18 இயலவில்லை

(1) திறமையில்லை
(2) முடியவில்லை
(3) விரும்பவில்லை
(4) தெரியவில்லை

( )

Q19 நித்திரைகொண்டது

(1) உறங்கியது
(2) ஓய்வெடுத்தது
(3) அமர்ந்தது
(4) காத்திருந்தது

( )

Q20 திண்ணமாக

(1) கோபமாக
(2) திமிராக
(3) உறுதியாக
(4) பணிவாக

( )


B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்
பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி.

காலாங் இந்திய நற்பணிக்குழு
தேசிய கல்விக் கழகத்தோடு
இணைந்து வழங்கும்...



# நட்சத்திரத் தேடல் 2011

தேதி : 28 செப்டம்பர் 2011
இடம் : பீசான் சமூக மன்றம்
நேரம் : இரவு 7 மணி முதல் 9 மணி வரை



இப்போட்டியில் பங்குபெற:

- பதினெட்டு வயதுக்கு மேல் இருத்தல் அவசியம்
- பீசான் சமூக மன்றத்தில் ஆகஸ்ட் 25ஆம் தேதிக்குள் பதிவு செய்ய வேண்டும்

சிறப்பு விருந்தினர்:
முனைவர் ராமசந்திரன்
நாடாளுமன்ற உறுப்பினர்

நிகழ்ச்சியைக் காண, இன்றே நுழைவுச் சீட்டுகளை வாங்கவும்!
நுழைவுச் சீட்டுகள் கிடைக்கும் இடம்:
*அப்போலோ உணவகம்
*தேசிய கல்விக் கழகம்
ஏமாற்றத்தைத் தவிர்க்க இன்றே செல்லுங்கள்!

* நிகழ்ச்சியைக் காண வருவோர்க்கு இலவச குளிர்பானம் உண்டு. நுழைவுச் சீட்டுகளை வரவேற்புக் கூடத்தில் கொடுத்து, குளிர்பானத்தைப் பெற்றுக் கொள்ளவும்.

Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

Q21 இந்த நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்கள் யாவர்?

(1) பீசான் சமூக மன்றத்தினரும் தேசிய கல்விக் கழகத்தினரும்
(2) காலாங் இந்திய நற்பணிக்குழுவினரும் தேசிய கல்விக் கழகத்தினரும் ( )
(3) பீசான் சமூக மன்றத்தினரும் காலாங் இந்திய நற்பணிக்குழுவினரும்
(4) தேசிய கல்விக் கழகத்தினரும் பீசான் சமூக மன்றத்தினரும்

Q22 நட்சத்திரத் தேடல் 2011 போட்டியில் பங்குபெற ஒருவர் என்ன செய்ய வேண்டும்?

(1) பதினெட்டு வயதிற்குள் இருக்க வேண்டும்
(2) பீசான் சமூக மன்றத்தில் செப்டம்பர் 28ஆம் தேதிக்குள் பதிவு செய்ய வேண்டும் ( )
(3) பீசான் சமூக மன்றத்தில் ஆகஸ்ட் 25ஆம் தேதிக்குள் பதிவு செய்ய வேண்டும்
(4) பீசான் சமூக மன்றத்தில் பதிவு செய்ய வேண்டும்

Q23 இந்நிகழ்ச்சிக்கான நுழைவுச் சீட்டுகளை எங்கே வாங்கலாம்? ( )

(1) தேசிய கல்விக் கழகத்திலும் அப்போலோ உணவகத்திலும்
(2) காலாங் சமூக மன்றத்திலும் பீசான் சமூக மன்றத்திலும்
(3) பீசான் சமூக மன்றத்திலும் தேசிய கல்விக் கழகத்திலும்
(4) அப்போலோ உணவகத்திலும் காலாங் இந்திய நற்பணிக்குழுவிலும்

'ஆ' பிரிவு

## C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)

Q24 மாலாவின் வீட்டின் ____________ கீதாவுக்குத் தெரியவில்லை. இருந்தாலும் அவள் மாலாவைத் தேடும் முயற்சியை விடவில்லை. Q24 (   )

Q25 குமார் தன் நண்பர்களுடன் திடலில் விளையாடினான். அதனால் அவன் வெள்ளை சட்டையில் ____________ பட்டது. Q25 (   )

Q26 பொங்கல் திருநாள் தமிழர்களால் கொண்டாடப்படும் ஒரு விழா. அன்று பசு மற்றும் ____________ மாடுகளை அழகாக அலங்கரித்து, அவற்றுக்குப் பொங்கல் ஊட்டிவிடுவார்கள். Q26 (   )

Q27 என் வீட்டிற்கு எதிரே உள்ள கடையில் நேற்று தீப்பற்றிக்கொண்டது. தீயணைப்பாளர்கள் அத்தீயை ____________ கட்டுக்குள் கொண்டு வந்தனர். Q27 (   )

Q28 ஆசிரியர் மாலதிக்குப் புதிய புத்தகம் கொடுத்தார். அவள் அதற்கு உரிய பணத்தை ஒரு கடித ____________ வைத்து ஆசிரியரிடம் கொடுத்தாள். Q28 (   )

| | |
|---|---|
| (1) அனைத்து | (2) எண் |
| (3) காளை | (4) கறை |
| (5) என் | (6) உரையில் |
| (7) உறையில் | (8) அணைத்து |
| (9) கரை | (10) காலை |

**D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| ஒரு நாள் தெனாலிராமன் மன்னரைப் போல் நடித்துக் காட்டி, மன்னரையே கேலி செய்துவிட்டான். அதைக் கண்ட மன்னர் (Q29)________ "என்னை நீ அவமானப்படுத்திவிட்டாய்! இதை நான் அனுமதிக்கமாட்டேன். உனக்கு மரண தண்டனை (Q30)________ என்றார். உடனே தெனாலிராமன், "மன்னரே! நான் உங்களை அவமானப்படுத்தவில்லை. வேடிக்கைக்காகத்தான் செய்தேன்," என்று மன்னரிடம் (Q31)________ மன்னரோ, "இல்லை! நீ செய்த தவறுக்குத் தண்டனை பெறவேண்டும். ஆனால், உனது மரணத்தை நீயே (Q32)________ நீ எப்படிச் சாக விரும்புகிறாய்?" என்று வினவினார். தெனாலிராமன் ஒரு நொடியையும் வீணாக்காமல், மன்னரின் பாதங்களைத் தொட்டு (Q33)________ "மன்னா! நீங்கள் என்னிடம் மிகவும் அன்பாக நடந்து கொள்கிறீர்கள். எனது (Q34)________ காலத்தில், நான் மரண தண்டனையைப் பெற விரும்புகிறேன்," என்றான்.<br>மன்னர், தெனாலிராமனின் புத்திசாலித்தனத்தைக் கண்டு வியந்தார். "நான் எனது வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு உனது ஆசையை (Q35)________ இனி இவ்வாறு நடந்துகொள்ளாதே!" என்று கூறி அவனை மன்னித்தார். | Q29 (    )<br>Q30 (    )<br>Q31 (    )<br>Q32 (    )<br>Q33 (    )<br>Q34 (    )<br>Q35 (    ) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | வணங்கி | (2) | நிறைவேற்றுகிறேன் | (3) | புலம்பினான் |
| (4) | மன்றாடினான் | (5) | தேடிக்கொள் | (6) | வாழ்த்தி |
| (7) | கோபமடைந்து | (8) | வயதான | (9) | விதிக்கிறேன் |
| (10) | வியந்து | (11) | தேர்ந்தெடு | (12) | இளமை |

D8 சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி

ஆறுமுகம் என்பவர் அன்பு நெஞ்சமும் இனிய சொல்லும் உடையவர். துன்பப்படுவோருக்கு உதவி செய்யும் நற்குணம் படைத்தவர். அவருடைய மனைவியும் தம் கணவரைப் போல ஈகை குணங்கள் நிரம்பியவர். ஆறுமுகம் தம் நிலங்களில் பயிரிட்டுத் தம் குடும்பத்தை நடத்தி வந்தார். வறுமை வந்து அவரைச் சில நேரம் வாட்டுவதும் உண்டு. இருப்பினும் அவர் தம்மால் இயன்றவரை பிறருக்கு உதவி செய்து வந்தார்.

ஒரு நாள் ஆறுமுகத்தின் ஊரில் திருவிழா நடைபெற்றது. வெளியூரிலிருந்து திருவிழாவைக் காணவந்த ஒருவன் காய்ச்சலால் அவதிப்படுவதைக் கண்ட ஆறுமுகம், அவனைத் தம் வீட்டுக்கு அழைத்து வந்தார். அவனுக்கு உணவும் மருந்தும் கொடுத்தார். அவன் குணமாகும்வரை அவனை உபசரித்து, குணமாகியதும் ஆறுமுகம் அவனை அனுப்பி வைத்தார்.

இன்னொரு நாள், வழிப்போக்கன் ஒருவன் ஆறுமுகத்தின் வீட்டுக்கு வந்தான். ஆறுமுகம் அவனை அன்புடன் வீட்டுக்குள் அழைத்தார். வழிப்போக்கன், "ஐயா! நான் இந்த ஊருக்குப் புதியவன். என்னிடம் நூறு பொற்காசுகள் உள்ளன. அவற்றை யாராவது திருடிவிடுவார்களோ என்று பயமாக இருக்கிறது. உங்களைப் பற்றி நிறைய கேள்விப்பட்டேன். உங்களது நேர்மையை ஊரே பாராட்டுகிறது. எனது பொற்காசுகளை நீங்கள் பத்திரமாக வைத்திருங்கள். பிறகு வந்து பெற்றுக்கொள்கிறேன்," என்று கூறிவிட்டு அந்தப் பொற்காசுகளை ஆறுமுகத்திடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றான், வழிப்போக்கன். பல மாதங்கள் கழித்து அந்த வழிப்போக்கன் தன் பொற்காசுகளை வந்து பெற்றுக்கொண்டான்.

ஒரு சமயம் தீபாவளி நெருங்கிக்கொண்டு இருந்தது. ஆறுமுகம் கொஞ்சம் கொஞ்சமாகப் பணத்தைச் சேமித்து வந்தார். அதைக் கொண்டு தமக்கும் தமது மனைவிக்கும் புதிய ஆடைகள் வாங்கி வந்தார். அன்றிரவு கனத்த மழை பெய்தது. மழையில் நனைந்தவாறு கணவன், மனைவி இருவரும் ஆறுமுகத்தின் வீட்டுக் கதவைத் தட்டினர். ஆறுமுகம் கதவைத் திறந்தார். முன் பின் அறிமுகமில்லாத அந்தத் தம்பதிகளின் நிலைமையை உடனே அவர் புரிந்துகொண்டார். அவர் சற்றும் தாமதிக்காமல் வாங்கி வைத்திருந்த புதிய ஆடைகளை அவர்களிடம் தந்து மாற்றிக்கொள்ளச் செய்தார். மழை நின்றதும் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டனர்.

இவ்வாறு ஆறுமுகம் பலனை எதிர்பார்க்காமல் பல அறச்செயல்களைச் செய்து, 'ஊருக்கு

39. அதைக் கொண்டு தமக்கும் தமது மனைவிக்கும் புதிய ஆடைகள் வாங்கி வந்தார் என்ற வாக்கியத்தில் அதை என்பது எதைக் குறிக்கிறது? (3 மதிப்பெண்கள்)

________________________________________

________________________________________

________________________________________

40. ஆறுமுகம் தாம் வாங்கிய புதிய ஆடைகளைத் தம்பதிகளிடம் கொடுக்கக் காரணம் என்ன? (3 மதிப்பெண்கள்)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

41. ஊர்மக்கள் ஆறுமுகத்தை "ஊருக்கு உதவும் உத்தமர்" என்று ஏன் பாராட்டினர்? ( 3 மதிப்பெண்கள்)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

Primary - 6 Preliminary Exam

P6 PRELIMINARY
TESTPAPER 9

ஒரு காட்டில் மான்கள்.......

1. 2 2. 2 3. 1 4. 4 5. 1 6. 3

7. 3 8. 2 9. 3 10. 2 11. 4 12. 4

13. 2 14. 2 15. 3 16. 1 17. 3

18. 2 19. 1 20. 3

21. 1 22. 3 23. 1

24. 2 25. 4 26. 3 27. 8 28. 7

29. 7 30. 9 31. 4 32. 11 33. 1 34. 8 35. 2

36. ஆறுமுகம் அன்பு நெஞ்சமும் இனிய சொல்லும் உடையவர். துன்பப்படுவோர்களுக்கு உதவி செய்யும் நற்குணம் படைத்தவர்.

37. காய்ச்சலால் அவதிப்பட்ட ஒருவனுக்கு ஆறுமுகம் உணவும் மருந்தும் கொடுத்து, அவன் குணமாகும்வரை அவனை உபசரித்து, குணமானதும் அவனை அனுப்பி வைத்து உதவினார்.

38. வழிப்போக்கன் ஊருக்குப் புதியவன். மேலும் அவனிடமிருந்த நூறு பொற்காசுகளை யாராவது திருடி விடுவார்களோ என்ற பயம் இருந்தது. ஆறுமுகத்தைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருந்ததால் அவனது பொற்காசுகளை பத்திரமாக வைத்திருக்க வழிப்போக்கன் தன் பொற்காசுகளை ஆறுமுகத்திடம் ஒப்படைத்தான்.

39. அதைக் கொண்டு தமக்கும் தமது மனைவிக்கும் புதிய ஆடைகள் வாங்கி வந்தார் என்ற வாக்கியத்தில் அதை வைத்து என்பது ஆறுமுகம் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து வைத்த பணத்தைக் குறிக்கிறது.

40. தம்பதிகள் மழையில் நனைந்திருந்ததால் அவர்களின் உடைகள் நனைந்துவிட்டன. அதனால் ஆறுமுகம் தாம் வாங்கிய புதிய ஆடைகளைத் தம்பதிகளிடம் கொடுக்கக் காரணமாகும்.

41. ஆறுமுகம் பலனை எதிர்பார்க்காமல் பல அறச் செயல்களைச் செய்ததால், ஊர்மக்கள் அவரை "ஊருக்கு உதவும் உத்தமர்" என்று பாராட்டினர்